மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரவர்களின் வேண்டுகோளின்படி கேள்வி 581-ம், 582ம் தள்ளி வைக்கப்படுகிறது.

திண்டிவனத்தில் பேருந்து நிலையம்.

*583 வினு—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) திண்டிவனத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் சுமார் 5 இலட்சம் செலவில் பேருந்து நிலையம் கட்டிமுடிக்கப்பட்டும் இன்னும் திறக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) திண்டிவனத்தில் உள்ள பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் விரைவுப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் வேலை முடிக்கப்பட்டது. விரிவுபடுத்தப் பட்ட நிலையம் 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள் முதல் பேருந்துகளின் உபயோகத்தில் இருந்து வருகிறது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

புதுக்கோட்டையிலிருந்து விரைவுப் பேருந்துகள்.

*584 வினு—திரு. த. புஸ்பராஜு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா ?

புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்கும், புதுக்கோட்டையிலிருந்து கோயம்புத்தூருக்கும் விரைவு பஸ் விட நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தற்சமயம் இல்லை.

(முற்பகல் 10-00)

திரு. த. புஸ்பராஜு : தலைவரவர்களே, சுமார் ஒரு வருட காலத்திற்கு முன்பு புதுக்கோட்டையிலே இருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து விடப்பட்டிருந்தது. ஆம்னி பஸ்ஸின் கட்டணத்தை விட அது ரூபாய் 5 அதிகமாக இருந்த காரணத்தால் வசூலாகாத நிலையில் நிறுத்தப்பட்டது. அந்த பஸ் திரும்

1978 மார்ச் 15]

பவும் திருச்சி, விழுப்புரம் வழியாக சென்னைக்கு விடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு திருச்சியிலிருந்து கோயம்புத்தூருக்குச் செல்ல இரவு 11 மணிக்குக் கூட்டம் அதிகம் இருப்பதால், புதுக்கோட்டையிலே இருந்து திருச்சி வழியாக, கோயம்புத்தூருக்கு ஒரு பஸ் விடப்படுமா? இதுபற்றி அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை இன்னும் சிறிது நேரம் நீட்டிக்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, சென்னையிலிருந்து இராமேஸ்வரத்திற்கு இரண்டு பேருந்துகள் செல்லுகின்ற காரணத்தால் அங்கு புதிதாக வேறு பஸ் விடுவது தேவையில்லை. புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்குப் போதிய பயணிகள் கிடைக்காத காரணத்தால்தான் அது நிறுத்தப்பட்டிருந்தது. கட்டணம் உயர்ந்தது காரணம் அல்ல. இருப்பினும் கட்டணம் குறைந்திருக்கின்ற இந்த நேரத்தில் புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்கு மீண்டும் ஒரு பஸ் விடுமாறு போக்குவரத்துக் கழகத்திற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. அது போன்றே புதுக்கோட்டையிலிருந்து கோவைக்கும் பஸ் விடுவது பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. த. புஸ்பராஜு: பேரவைத் தலைவரவர்களே, இரவு 4 ஆம்னி பஸ்கள் விடப்பட்டும் இடம் கிடைக்காத காரணத்தால் இந்தப் புதிதாக விடக்கூடிய பேருந்தை புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்கு விடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, நான் ஏற்கெனவே கூறியபடி கட்டண உயர்வு குறைவாக இருக்கும் இந்நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனையைக் கருத்தில் கொண்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள், விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

(2) ஒழுங்குப் பிரச்சனைகள்.

(அ) எஸ். எஸ். எல். சி. தேர்வு வினாத் தாள்கள் மாற்றிக் கொடுக்கப்பட்டது குறித்து.

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, மிக அவசியமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த பொது மக்களைப் பாதிக்கக் கூடிய ஒரு பிரச்சனையைக் கிளப்புகிறேன்..... இது ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர்...... குறுக்கீடு......